Reg. No. M. 2997.

தனிப்பிரதி 1 அணா

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமைதோறும் வெளிவருவது

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.— குறள்.

VOL, I. { புதுவை, ஸ்ரீமுக ஹஸ் மாசி மீ ௨௳ (15—2—34) } No. 12

திருமந்திரம்

ஐயென்னும் வித்தினி லானை விளைப்பதோர்
செய்யுண்டு செய்யின் றெளிவறி வாரில்லை
மையணி கண்டன் மனம்பெறி னங்கிலம்
பொய்யொன்று மின்றிப் புகவெளி தாமே.

பள்ளச்செய் யொன்றுண்டு பாழ்ச்செய் யிரண்டுள
கள்ளச்செய் யங்கே கலந்து கிடந்தது
வுள்ளச்செய் யங்கே யுழவுசெய் வார்கட்கு
வெள்ளச்செய் யாகி விளைந்தது தானே.

மூவணை யேரு முழுவது முக்காணி
தாமணை கோலித் தறியுறப் பாய்ந்திடு
நாவணை கோலி நடுவேற் செறுவுழார்
காலணை கோலிக் களருழ வாரே.

உ
திருவருள் துணை.

காலமுண்டாகவே காதல்
செய்துய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண்டானெங்கள் பாண்டிப்
பிரான்தன் னடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்கு
கின்றானவந்து முந்துமினே.
(திருவாசகம்.)

வித்தகம்

புதுவை,
ஸ்ரீமுக மாசி மீ 4உ

அறமுதல் நாற்பொருள்

ஒருவன் அடையவேண்டியன அறமுதல் நாற்பொருளே என்பர். அவை அறம் பொருள் இன்பம் வீடு — தர்மம் அர்த்தம் காமம் மோட்சம் என்பனவாம். இவற்றையே சதுர்வித புருஷார்த்தம் என நூல்களெல்லாம் சிறப்புறக் கொண்டு கூறும். "அறமுதலா நான்கினையும் அருந்தவருக்கு அருளுமது" என்றார் மணிவாசகப் பிரபு. "அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே" என ஆன்றோரும் கூறினர். அறமே ஆதியாயது. "சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்து வழிப்படூஉம்" (புறநானூறு) என்றனர் அறிஞர். தெய்வப் புலவரும் அறத்தையே முதற்கண் வைத்து வலியுறுத்தினர்.

குறள்

சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூ [உங்
காக்க மெவனோ உயிர்க்கு.

(ஷை அறன் வலியுறுத்தல் செ. 1.)

ஆதியாகிய அறமே வீடுமாகும். அறமே சிவம்—பதி. இறைவனே அறவாழியந்தணன்.

"அறவாழி யந்தணன்றாள் சேர்ந்தார்க் [கல்லால்
பிறவாழி நீந்தலரிது"

என்பது தேவர் வாக்கு. "உற்ற வாக்கையின் உறுபொருள்" ஆய்—சத்தாய் நின்று நமக்கு ஆக்கம் தருவது—இன்பம் தருவது—வீடு தருவது—வீடாவது அறமே. அறம்—அறவன் — அறவாணன் சிவனே—சிவம் எனும் செம்பொருளே.

திருமந்திரம்

அறவன் பிறப்பிலி யாருமி லாதா
னுறைவது காட்டக முண்பது பிச்சை
துறவெனுங் கண்ணுர் துறந்தவர் தம்மைப்
பிறவி யறுத்திடும் பித்தன்கண் டீரே.

(ஷை 6-ம் தந்-துறவு செ. 3.)

ஒழிந்தன காலங்க ளூழியும் போயின
கழிந்தன கற்பனை நாளுங் குறுகிப்
பிழிந்தன போலத்தம் பேரிட ராக்கை
யழிந்தன கண்டு மறமறி யாரே.

அறமறி யாரண்ணல் பாத கிவையுந்
திறமறி யார்சிவ லோக நகர்க்குப்
புறமறி யார்பலர் பொய்ம்மொழி கேட்டு
மறமறி வார்பகை மன்னிநின் றாரே.

(ஷை 1-ம் தந்—அறஞ் செயான் திறம் 2. 3.)

அறம் வியாப்பியம். அதனிடத்து அடங்கினது — அதிற் பாதியாயது அர்த்தம் — பொருள் — வியாபகம். தர்மம் என்பது தாங்குவது—வகித்திருப்பது—இடமாயிருப்பது எனப் பொருள் படும். ஆதலால் தர்மமாகிய அறம் முதன்மையுடையதாயிற்று. அறத்திற் சிறந்த ஆக்கமில்லை. அதனை மறத்தலின் மிக்க கேடும் இல்லை. அமலம் ஆக்கமுறச் செய்வது அறமே.

அர்த்தம் என்றால் என்னை? பாதி—அரை ($\frac{1}{2}$) என்பது தானே. அது தான் பொருள் என வழங்கப்படுவது. முதலாயிருப்பதற்கு அதன் தொடர்பாகிய பாதி இன்னது என விளக்குவதே அர்த்தம் சொல்வதென்பது—பொருள் கூறுவதென்பது. எதற்கு அர்த்தம் சொல்வதென்றாலும் அதன் பாதியை விளக்குவதே அதன் பொருளாகும்—அதற்குப் பொருள் சொல்வது என்பதாகும். ஒரு விஷயத்தை—சொல்லை சொல்லுமிடத்து—கேட்குமிடத்து அது விளங்காமையால்—அது பூரணப்படாமையால், இதன் அர்த்தம் என்ன என்ற வினா உண்டாகிறது. அவ் அர்த்தத்தை அறிந்ததும் அவ்விஷய விளக்கம் பூரணமாகிறது. பூரணமில்லாமல் இருப்பதால்—பூரணப் படாமையால் — குறைவுபட்டிருப்பதால்—பாதி விளங்காமல் இருப்பதால் — பாதியாயிருப்பதால், அப்பாதி எனும் அர்த்தத்தைக் காட்டுவது தான்—சேர்ப்பது தான், அர்த்தம் சொல்வதென்பது — பொருள் சொல்வதென்பது. அந்த அர்த்தம் தான்—பாதிதான் பொருள். இதனைப் பெறப்படுவது யாது? முற்பகுதி இடம்—அறம் என்பது. பிற்பகுதி பொருள்—அர்த்தம் என்பது. இடம் இருந்தபடியால் பொருள் சொல்ல வேண்டியதாயிற்று. இடம் விளங்காதபடியால் — பூரணப்படாத படியால் பொருளை முறையாகச் சேர்த்து விளக்க வேண்டியதாயிற்று—பூரணப்படுத்த வேண்டியதாயிற்று. முற்பாதியோடு பிற்பாதியைச் சேர்த்துப் பூரணப்படுத்த வேண்டியதாயிற்று. பொருள் இல்லாமல் இடமுண்டோ—விளங்குமோ? இல்லை. இடமில்லாமல் பொருளுண்டோ — விளங்குமோ? இல்லை. ஆதலால் இடமும் பொருளும் ஒன்றே. அவை பிரியாமல் பிரிந்து காட்டும். இவ்

வுண்மை அறியாதார் இடத்தையும் பொருளையும் வேறு வேருகக் காண்பர்—பேசுவர். **இதனுல்** பெறப்படுவது யாது? இடமும் பொருளும் பிரியாமல் பிரிந்து காட்டி எஞ்ஞான்றும்—என்றும் உள்ளன என்பதேயாகும். இடமும் பொருளும் என்றும் உள்ளன என்பது வெள்ளிடை மலையாம். வியாப்பியமாகிய இடமும் வியாபகமாகிய பொருளும் எஞ்ஞான்றும் உள்ளன என்ருல் என்னை? எஞ்ஞான்றும் அசைவு ஒழியாது—அழியாது நித்தியமாயிருப்பது என்பதாம். அசைவு அற்ருல் சூனியம் என்பது—பாவம் என்பது—கொலை என்பது—மரணம் என்பது—சாதல் என்பது. அசைவு தூயதாய் நித்தியம் பெற்ருல் அதுவே அறம் என்பது—இடம் என்பது—வீடென்பது—ஆதியும் அந்தமும் ஒன்ருயின என்பது—ஆதியே அந்தமாயிற்று என்பது. இல் என்னும் சரீரத்தின் அசைவு அறம். அசைவு தூயதாய் நித்தியம் பெற்ருல் அவ் அறமே வீடாகும். அசைவு அற்ருல் அறமன்று. அசைவு அநித்தியம் பெறுதற்கேற்ற செயல் அறமன்று—மறமே—பாவமே. இல் அருது இருப்பதே இல்லறம்—அசைவு தூயதாயிருப்பதே — நித்தியம் பெறுவதே இல்லறம். "இல்லற மல்லது நல்லற மன்று". (ஒளவை) அத்தகைய தூய அசைவை — அறத்தைக் கைக்கொண்டு ஒழுகி வர வர அறம்—இடம் பூரணப்படும். எவ்வாறு பூரணப்படும்? அறமாகிய இடம் இடமாகிய ஒரு பகுதி—பாதி—முற்பாதி, அர்த்தமாகிய பிற்பாதியோடு சேர்ந்து—பிற்பாதியையும் அடைந்து—நிறைமுறையோடு பஞ்சிகரணிக்கப் பட்ட முன்னிலைகளோடு சேர்ந்து பூரணப்படும் என்பது. பூரணப்பட்டால் அஃதாவது அறமாகிய இடமும் பொருளும் ஒன்றென அறிந்து உணர்ந்து கண்டு கொண்டு ஒழுகி ஒன்ருனல்—ஒன்றுபட்டால் — தன்னிலை முன்னிலைகள் ஒன்றுபட்டால் அவ்விரண்டின் ஒற்றுமையால்—அவ்விரண்டும் ஒழிவற ஒன்றதலால் மூன்ருவது ஒன்று ஆக்கமுறும். அதுதான் என்னை? அதுதான் இன்பம்—காமம் எனப்படுவது என்க. காமம் என்ருல் என்னை? காமம் என்ருல் உலக மாக்கள் உணரும் உணர்ச்சியன்று. அசுத்த உடம்பாலாய—காயமாயத்தாலாய— மலமாக்குரம்பையாலாய அசுத்த உணர்ச்சியன்று—சாதலைத் தரும் தீய காமமன்று—அறத்தானுகாத உணர்ச்சியன்று. பின்னர்க் காமம் என்பது யாது எனின், அதுதான் வீடு பேற்றின்பம் என்பது. வீடு பேற்றினைத் தரும் காமம் என்பது. அது தான் அறத்தான் வரும் இன்பம் என்க. "அதுதான் பிறப்புப்பிணி மூப்புச் சாக்காடு அவலக் கவலைக் கையாற்றினீங்கி மணியினது ஒளியும் மலரினது நாற்றமும் சந்தனத்துத் தட்பமும் போல் உண்ணின் றெழுதரு மொரு பேரின்ப வெள்ளத்தது" (இறையனர் அகப் பொருளுரை) என்க. காயமாயம் கழிந்த—மலம் விமலமாகப் பெற்ற மெய்யடியார்க்குரியது— மெய்யடியாரால் அடையப்படுவது என்க. பின் வரும் நாவுக்கரையர் வாக்கைக் கண்டு தெளிக.

காதல் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்"
வரிக்குயில் பேடையோடாடி
வைகி வருவன கண்டேன்
பேடை மயிலொடுங் கூடிப்
பிணைந்து வருவன கண்டேன்

(திருவையாறு. பண்—காந்தாரம் 1, 2, 5)

காயமாயங் கழிந்து மலம் விமலமாகி தன்னிலையே முன்னிலை முன்னிலையே தன்னிலை என்னும் வாய்மையான உணர்ச்சி—ஞான நேத்திரம் பெற்ற பின் அன்ருே, மாயையை "மா" எனப்பூத்த "இ"யை — "உருவளர் காமன்றன் வென்றிக் கொடி போன்றொளி"ரும் தன் சரீரமாகிய விமலவல்லியை—சத்தியைக்கண்டபின் அன்ருே, தான் மன்மதனுன பின்னன்ருே மணிவாசகன் கோவை பாடினன். முன்னிலைகளைக் கண்டு களித்து அவச் சலனமடையும் அசுத்த உணர்ச்சியுடைய உலகமாக்கள் பாடல்கள் போன்றதா திருச்சிற்றம்பலக் கோவை? மெய்யடியார் இலக்கணம் அறியாது அவரெல்லாம் அசுத்த முன்னிலைகளையே கண்டு களித்தார்—புகழ்ந்தார் என இக்காலத்தில் கூறத்துணிவாரும் உளர். மெய்யடியார் காமம்—வீடுபேற்றின்பம், கந்தழியின் பேருருவே என அறியமுடியாத அசுத்த காமப் பித்தர் தம் மனம்போனவாறு கூறுது வேறு என் செய்வர்?

காதல் விரிசிலத் தாரா வகைகாணுர்
சாதல் நன்றென்பர்; தகைமையோர்—[காதலும்
ஆக்கி உளித்தழிக்கும் கந்தழியின் பேரு[ருவே
நோக்கிலரை நோவதெவன்.

என்பது பெரியார் வாக்கு. விரிப்பிற் பெருகும். அமயம் நேர்ந்துழி விரித்து விளக்கப்படும்.

பின் அவ் வீடுபேற்றைத் தரும் இன்பம்—விமல காமம், பெற வேண்டிய நிறை பெற்ருல் அறம் (இடம்—விமல தநு) பொருள் இன்பம் மூன்றும் ஒன்ருகித் திரிந்து வீடு என்று ஆகும். ஆதலால் இடமே—அறமே வீடானது என்க. ஆதியே அந்தமானது என்க. இடமாகிய வீடு கட்டும்போது கட்டிய நிறைக்கேற்ப—அளவுக்கேற்பப் பொருளும் அதனில் அடங்கியது. வீடு கட்டப்பட்டுப் பூரணமடைந்தால்—அது எவ்வளவு நிறை—பொருள் கண்டு கொண்டு ஆக்கப்படவேண்டுமோ அவ்வளவு நிறையைக் கூட்டிக் கட்டிக் கொண்டால்—மலத்தை விமலமாக்கற்கேற்ற— அமலமாக்கற்கேற்ற முன்னிலைகளை நிறை கண்டு பஞ்சிகரணித்து உய்தியடைந்தால் வீடு ஆக்கப்பட்டது—வீடுபேறு உளதாயிற்று. சரீரமாகிய இல் சுத்த அசைவால்—நல்லறத்தால்—முன்னிலை தன்னிலைகள் ஒன்ருனதால் விமலமாய் அமலமாய் அருளாயிற்று—அருள் வடிவாயிற்று—சத்தி வடிவாயிற்று என்க. அதனைப் பிரியாத

பொருளும் சிவமாயிற்று—சிவாங்கமாயிற்று என்க. இடமும் பொருளும் அருள் வடிவதுவும் சிவாங்கிசனுமாயின என்க. அசுத்தமான—அநித்தியமான பல இல்தோறும் துச்சிலிருந்த—ஒதுங்கியிருந்த உயிர்க்கு புக்கில்—அமலதநு—நித்தியத்துவம்—நிலையான வீடு ஏற்பட்டுவிட்டது என்க. அசுத்தமாயா வீடு அருள் வீடாகமாறிவிட்டது—ஆக்கப்பட்டது என்க. அசுத்த மலிந்த உடலுயிர்கள் அமலமடைந்து சத்தியும் சிவமுமாயின—சிவாங்கமாயின என்க. அறமும் பொருளும் ஒன்றி வீடு பேற்றின்ப வடிவாய், பின் அம் மூன்றும் திரிந்து வீடாயின. அறமுதல் நாற்பொருட் பண்பு இதுவே. வாய்மையான சதுர்வித புருஷார்த்தம் இதுவே. சைவசமயம் இதுவே. சைவ உண்மை இதுவே என்க. ஆறறிவு பூரணம்பெற்ற மானிடர் அடையும் பேறு—அடையவேண்டிய பேறு இதுவே என்க. இவ் அரிய உண்மை உபதேசமே—இதனை அடைதற்குரிய சாதகமே சற்குருநாதனால்—தென்முகப் பரமாசாரியனால்—கயிலை முதற் குரவனாகிய நந்தியெம்பெருமானால் பக்குவ சீவர்க்கு அருளப்பட்டது — அருளப்படுவது என்க. இவ் உண்மையே பின் வரும் திருவாக்குக்களால் குறிக்கப்பட்டன:

திருவாசகம்

நன்றாக நால்வர்க்கு நான்மறையி னுட்
[பொருளை
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான்
[காணேடீ
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தா
[னாயிடினும்
கொன்றான்காண் புரமூன்றுங் கூட்
[டோடே சாழலோ.

அருந்தவருக் காலின்கீ ழறமுதலா நான்
[கினையும்
இருந்தவருக் கருளுமது எனக்கறிய
[வியம்பேடீ
அருந்தவருக் கறமுதனான் கன்றருளிச்
[செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண்
[சாழலோ
(ஷை திருச்சாழல் செ 16, 20.)

"கொன்றான் காண் புர மூன்றும் கூட்டோடே" என்பது அறமே வீடானது என்பதைக் குறித்தது. இடமாகிய சரீரம் அசுத்தம் நீங்கி—பாசம் நீங்கி அருள் வடிவானதைக் குறித்தது—வீடானதைக்குறித்தது.

"............... ....
எந்தூர் மூதூ ரெழில்நகை யெரியின்
வீழ்வித் தாங்கன்
றருட்பெருந் தீயின் அடியோம் அடிக்குடில்
ஒருத்தரும் வழாமை யொடுக்கினன்
... ."
(ஷை திருவண்டப் பகுதி)

என்பதன் பொருளையும்,

"................................... ....
தெருளு மும்மதில் நொடிவரை யிடிதரச்
[சினப்பதத் தொடுசெந்தீ
அருளு மெய்ந்நெறி பொய்ந்நெறி நீக்கிய
[அதிசயங் கண்டாமே.
(ஷை அதிசயப் பத்து செ 10).

என்பதன் பொருளையும் கொண்டுள்ளது. அறம் உரைத்ததன் பயன்—உரைத்தவாறு வழுவின்றி ஒழுகியதன் பயன் இதுவே. அறமே வீடு. அறமெனவே ஏனையவும் அதனுள் அடங்கின. இறைவன் குருமூர்த்தியாய் வந்து உணர்த்துவது யாது? உலகியலையே — ஒப்புரவொழுகுதலையே—வியாபகமாகிய முன்னிலையை நிறைகண்டு கொண்டு ஒழுகி உய்தியடைதலே அறமும் பொருளும் ஒன்றாகப் பெற்று இன்புறும் நெறியேயாகும். முற்பாதியோடு பிற்பாதியைச் சேர்த்துப் பூரணப்படும் நெறியேயாகும். காயமாயம்கழிந்து அமலமுறும் வீடுபேற்றின்ப நெறியேயாகும். இறைவன் உணர்த்தாவிடின் இவ்வுண்மை-உலகியற்கை அறியப்படமாட்டாது. தத்துவார்த்தம் புலப்படாது. தத்துவார்த்தம் என்றால் என்னை? தத்துவத்தின் அர்த்தம் என்பதுதானே. தத்—அது, துவம்—நீ. அது என்றால் எது? மனம் வாக்குக்காயம் என்னும் மூன்றனுக்கும் அகப்பட்ட முன்னிலையல்லவா? வியாபகம் அல்லவா? பலர் அது என்றால் அருவப்பொருள்—கண்ணுக்கெட்டாதபொருள் என்று கையைத் தூக்கி வானத்தைச் சுட்டிக்காட்டுவர். அது என்றால் சிவ பரம்பொருள்—மனம் வாக்குக் காயங்களுக்கு எட்டாதது என்று கூறி அமைவர். வாக்குக்கும் மனதுக்கும் எட்டாததை எவ்வாறு அடைவது என்பதனை அறியாது முன்னிலையை முற்றாக வெறுத்து, அதனை நிறை கண்டு பஞ்சீகரணித்து உய்தியடைய அறியாது வாதம் புரிந்து சாதலடைவோர் இவர். அறமும் பொருளும் ஒன்றி இன்புறும் நெறியறியாது மாழ்குவோர் இவர் முன்னிலையை நிறைகண்டு பஞ்சீகரணித்து உய்தியடைவதன்றோ—ஒப்புர ஒழுகுவதன்றோ அறம்-அறவினை. இடமும் பொருளுமாகிய வியாப்பிய வியாபகங்களின் இயல்பை அறிந்தவனே — சொல்லையும் பொருளையும் உணர்ந்தவனே ஞானி. சொல்லும் பொருளுமாய்—சொல்லும் பொருளும் போலப் பிரியாமல் பிரிந்து நிற்பன வியாப்பிய வியாபகங்களன்றோ—சிவமும் சத்தியுமன்றோ—சிவமும் விண்டுவுமன்றோ! உயிரும் மெய்யுமன்றோ! பரமேசுவரனும் பார்வதியும் சொல்லும் பொருளும் போல ஒன்றி நிற்கின்றனர் என்றார் மகா கவியாகிய காளிதாசர்.

"வாகர்த்தா விவசம்ப்ருக்தௌ வாகர்த்த
[பிரதிபத்தயே,
ஜெகதப்பிதரௌவந்தே பார்வதி பரமேஸ்
[வரௌ"

என்பது இரகுவம்மிசக் காப்புச் சுலோகம்.

சொல்லும் பொருளும் என நடமாடும்
[துணைவருடன்
புல்லும் பரிமளப்பூங்கொடியே.

என்றனர் அபிராமிப்பட்டர்.

தன்னிலை முன்னிலைகளின் இயல்பை அறிந்தவனே — தன்னிலையே முன்னிலை என அறிந்தவனே ஞானி. (நான் + நீ = ஞானி. நானம் (அறிவு) ஞானம் என வழங்குவதும் அறிக.) முற்பாதியோடு பிற்பாதி சேர்ந்த சுத்த உணர்ச்சி கைவரப்பெற்றவனே

ஞானி. இடமும் பொருளும்—தர்மமும் அர்த்தமும் ஒன்றென உணர்ந்தவனே ஒன்றாகப் பெற்றவனே ஞானி என்க. இவனே திரிநேத்திரம்—ஞான நேத்திரம் பெற்றவன்—உடம்பெலாம் கண்கள் பெற்றவன் — ஆயிரங்கண்ணான் — வியாபக முழுதையும் உணர்ந்தவன் — அருளுதையமாகப் பெற்றவன்—எம்பெருமான் பள்ளி எழுந்தருளப் பெற்றவன் — முத்தி வாயலில் நிற்பவன்—அசுத்த நாதங்களும் கடிக்கும் பன்னகமும் பிடிப்பரும் சியமும் முதலாக ஏதம் செய்த கரணங்களெல்லாம் சுத்தமாக, இன்பமயமாக மாறப் பெற்றவன் — முத்தி வாயலில் நிற்பவன்—மெய்யடியான்—வழியடியான்—ஞான நிட்டையாகிய உண்மை நிட்டையாகிய சகச நிட்டையுடையவன் என்க. இவனை மன்னுயிரெல்லாம் தொழும். இவன் பெருமை அளவிடற்கரியது. இவ்வுண்மைகளை அறியாதார் வாயோடு கண்மூடி மயக்கமுற்று ஓராங்கு வீற்றிருக்கும் உபாசக நிட்டையாளரை ஞான நிட்டையுடையோர் என அபிமானம் பற்றிப் புகழ்ந்து வாதம் புரிந்து சாதலடைவர். முன்னிலைகளை நிறை கண்டு பஞ்சீகரணித்து உறவு படுத்த அறியாது அவற்றிற்கு அஞ்சி ஒருபால் ஒதுங்கிச் சாதலடைவோர் ஞான நிட்டையாகிய இயற்கை நிட்டையுடையாராதல் எவ்வாறு? நாற்பொருட் பெற்றிதேர்ந்து உய்தியடைதல் எவ்வாறு? மெய்யடியார்க்குரிய அருட்சித்திகளை—வாய்மையான அட்டமாசித்தி முதலியவற்றை சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளர் உபாசக நிட்டையாளர் அறியமுடியுமா? அருட் சித்திகள் இவரை அணுகுமா? போலிச் சித்திகள் அருட்சித்தியாகுமா? விரிப்பிற் பெருகும். முன்னிலையாகிய மாயையே—வியாபகமே, தெய்வ வடிவமாகிய—ஊழ்வடிவமாகிய திரோதானநிலையன்றி வேறு என்னை? திரோதானமாகிய மாயையே சத்தியத்தின் ஆதித் தோற்றமன்றி வேறு என்னை? அம்மாயையை உறவு படுத்தாத விடத்து—வெல்லாத விடத்து அருளைக் கண்டு உய்தியடைவது எப்படி? சத்தியமாகிய கடவுளைக் காண்பது எப்படி? பிரமத்தைக் கண்டு அதுவாதல் எபபடி? திரோதானமே அருளாக மாறவேண்டுமன்றோ! மடைமாறுதல் மாறியாடுதல் என்பனவற்றின் பொருள் என்னை? வியாபகமாகிய முன்னிலையை நிறைகண்டு பஞ்சீகரணிப்பதன்றோ — உறவு படுத்துவதன்றோ உண்மைச் சிவபூசை. கடல் கடைந்து அமுதம் பெறுவதன்றோ உண்மைச் சிவபூசைப் பயன். இத்தகைய சிவபூசையாலன்றிக் காலன் அடிமைப்படுவானே? ஆலம் அமுதமாகுமா? "ஆலத்தினால மிர்தாக்கியகோன்" (கோவை) "அருளொடு பராவமுதாக்கினன்" (திருவண்டப்பகுதி) என்னும் மணிவாசகர் அநுபவத் திருவாக்கை உற்று நோக்கினருண்டோ? மெய்யடியாரெல்லாம் அறவினையால்—இல்லறத்தால்—அறமும் பொருளும் ஒழிவற ஒன்றப் பெற்றமையால்—உண்மைச் சிவபூசையால் காலனை வென்று வீடு பேற்றின்பம் பெற்றனரே—அழியாக் காமம் பெற்றனரே நித்தியத்துவம் அடைந்தனர்—மீண்டும் வாரா நெறியை அடைந்தனர்.

இச் சிவபூசையே அறவினை. அறவினையாவது கொல்லாமையன்றோ!—இல்லறமன்றோ! இல் தனக்குரிய அசைவு சுத்தமாய் அருளது இருப்பது அன்றோ—நித்தியத்துவம் அடைவது அன்றோ இல்லறம்! முன்னிலைகளை நிறைகண்டு பஞ்சீகரணியாத அசுத்த அசைவால் — மறவினையால் ஏற்படுவது கோறல் அன்றோ! மறவினை கொலையன்றோ! அது பிறவினையெல்லாம் தருமன்றோ! பிறவி நெறி காட்டுமன்றோ! ஆதலால் தன்னிலை முன்னிலைகளின் ஒருமையே —வியாப்பிய வியாபகங்களின் ஒற்றுமையே தத்துவார்த்தம் என்க. தன்னிலை முன்னிலைகளின் இயல்பறியாதார் தத்துவார்த்தம் அறியமுடியுமா? சிவலிங்கத்தை அறியமுடியுமா? இடுகுறி காரியப்பட்ட வகையை அறிய முடியுமா? சிவலிங்கத்தின் தத்வார்த்தம் கூறமுடியுமா? சிவலிங்கபூசை புரியமுடியுமா? ஞான நிட்டையாகிய சகச நிட்டையை அறியமுடியுமா சதுர்வித புருஷார்த்தங்களையும் அடையமுடியுமா? முடியாது.

இதுகாறும் கூறியவைகளால் பெறப்படுவன—கண்கூடாகக் காட்டப்பட்டன யாவை? முழுதாகிய ஒன்றன் பாதியே அர்த்தம்—பொருள் என்பதூஉம், பொருள் தான் வியாபகம் என்பதூஉம், வியாபகந்தான் விவகரிக்கத்தக்கது என்பதூஉம், வியாபகம் பொருளும் வியாப்பியம் இடமுமாம் என்பதூஉம், இவ்விரண்டும் பிரிபடாதன என்பதூஉம், இவை பிரியாமல் பிரிந்து காட்டும் என்பதூஉம், அறம் பொருள் இன்பம் வீடு--தருமம் அர்த்தம் காமம் மோட்சம் என்பன வியாப்பியம் வியாபகம் என்னும் இரண்டுமாய் அவற்றுள் அடங்கும் என்பதூஉம் ஆதியும் அந்தமும் ஒன்றே என்பதூஉம் அஃதாவது ஆதியாகிய அறமே அந்தமாகிய வீடுமாயிற்று என்பதூஉம், அசுத்த நிறை ஐகாரம் (அசுத்த தநு) அமல நிறை பெற்றால், அமல ஐகாரமானால் (சுத்த தநு) வீடுபேறு உளதாகும் என்பதூஉம் இன்னோரன்ன பிற உண்மைகளுமாகும்.

அறமும் பொருளும் ஒன்றிய விடத்து இன்பம் உண்டாகும்—வீடுபேற்றின்பம் உளதாகும். இம்மூன்றும் கெட்டுத் திரிந்ததே வீடாகும் என்பது முடிபு. மலமாக் குரம்பையாகிய தூலம் விமலம் அடைந்து வேத நான்கையும் கண்டு ஓதினாலன்றி நாற்பொருளும் அடையப்படமாட்டா. வீடு கைகூடாது. இவ்வுண்மை பின்வரும் திருமூலர் திருவாக்கானும் தெள்ளிதின் உணரப்படும்.

திருமந்திரம்

வேதத்தை விட்ட வறமில்லை வேதத்தி
னோதத் தகுமற மெல்லா முளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை யோதியே வீடுபெற் றார்களே.
(ஷ பாயிரம் 3-வது வேதச் சிறப்பு செ.1)

உடம்பின் அருமை பெருமை

[11-வது வாரத்தொடர்ச்சி]

சுவேதாசுவதர உபநிடதம்

"ப்ருதிவ்யாப் தேஜோ நிலகே ஸமுத்திதே
பஞ்சாத்மகே யோக குணேப் ரவ்ருத்தே
நதஸ்யரோகோ நஜரா நம்ருத்யு:
ப்ராப்தஸ்ய யோகாக்கி மயம் சரீரம்,

(இ—ள்) ஐந்து தன்மைகளையுடைய பிருதவி முதலிய பஞ்ச பூதங்களும் (சரீரம்) வெல்லப்பட்டபோது, யோகத்தின் பயனுன சகல ஐசுவரியமும் உண்டானபோது (அமலமுதற்படி யடைந்தபோதென்பது), யோகத்தாலான தேசோமயமான (பொன்மயமான) சரீரத்தை அடைந்தவனுக்கு (மாதிப் பிறந்தவனுக்கு), நோயில்லை ஜரையில்லை (நரை திரை மூப்புப் பிணியில்லை) மரணம் இல்லை என்பதாம்.

அமலமடைந்த — சித்தியத்துவம் அடைந்த இவன் நாலம், வாதம் முதலிய பிணிகட்கும் காமம் கோபம் முதலிய குணங்கட்கும் காரணமானதும் சாதலைத் தருவதுமாகிய அசுத்த நிறை—சாதலைத் தரும் ஐ—சாஎய—இருள் நீங்கப் பெற்றமையால், பிணமாக விழமாட்டாது என்பதாம். இத்தன்மை வாய்க்கப் பெற்றவனாகிய வழியடியான் உலகில் வாழ்ந்து அமலப் படியேற்றம் பெற்று தனது நாலம் சூக்குமமாகப் பெற்று அதனோடு மறைந்து முத்தியடைவான் என்பது கருத்து.

சித்தாந்த சிகாமணி

மானமின்றயே சிவத்தினில் வைத்தவித் [தியத்தோன்
ஊனமின்றியே மூப்பொடு முயிர் விடு [மரணம்
தானுனும் பசிதாக மென்றிவற்றினைச் [சாரான்
வானமொன்றெடும் பற்றிலாவா றென [மன்னே.

இலகுற ஞானவங்கியினிலிட்டயல்
விலகதலைறத்துளவினைவித்தோடுதான்
நிலைவுறதேகி போலமர்ந்த ஞானிமெய்
உலகினருடலினை யொத்தியக்குமால்.

[சாதலைத்தரும் அசுத்த "ஐ" நீங்கப் பெற்ற—அசுத்த தநுமாறப் பெற்ற மெய்ஞ்ஞானிகள்—மெய்யர்கள் பிணி மூப்புச் சாக்காடின் இன்றி உலகர் போல் வாழ்ந்து படியேற்றம் பெறுதலும், அவரே நாலத்தோடு மறைந்து வீடடைதற்குரிய மெய்யடியார் என்பதும் ஆகமாந்தமாய் எழுந்த சித்தாந்த சிகாமணியால் சுருக்கக் கூறி விளங்க வைக்கப் பட்டமை கண்டு கொள்க.]

வருணைகன்னிலைத்தருமக்களிருவகைப்படு [மொன்
றானைறைந்ததுமற்றையதடனைறைந்தது [வாம்
பானைறைந்தது பயிலுவர் சிவாச்சிரயத்தர்
பிரமனல்கிய தருமமே பிராகிருதர்க்கு.

[எல்லாம் விதியின் வழியே நடக்கும். விதியை மதியால் வெல்ல முடியாது என்ற விதிக்கு—வினைக்கு ஆளாய் விதியை வெல்லும் வகையறியாத காலனுக்கு இரையாகிப் பிறவி வலைப்படுவர் உலகமாக்கள். இவரே பிராகிருதர்—அழியும் ஆக்கையை உடையவர்—பிரமன் நல்கிய தருமத்தைக் கைக்கொண்டு ஒழுகுபவர். அஃதாவது "எல்லாம் அயன் எழுத்தின் படியே நடக்கும். ஆதலால் அதனை வெல்லமுடியாது. வெல்லுவதென்பது பித்தன் வழக்கு—முயற்கொம்பு". எனப் பலவாறு உழறிக்குழறி சரீரத்தைப் பொருட்படுத்தாது—அதன் அருமை பெருமையை அறியாது சாதலை எதிர்பார்த்த பாவிகளாய் வீற்றிருப்பவர் என்பது. இதனுற்றான் உலக முழுவதிலும் இக்கொள்கை சட்டமாய்விட்டது—பிரமாணமாய் விட்டது. நாலத்தோடு மறைதல் என்னும் உண்மையை உலகம் உணர்வதே மிகக் கடினம் என்றால் அதனை ஒப்புக் கொள்வது எப்படி? வித்தியா சாமர்த்தியத்தால் எத்துணை நீண்ட ஆராய்ச்சிகள் புரியினும் இவர் உண்மையை உணரமாட்டார். அரன் அறைந்த வண்ணம் அஃதாவது கயிலை முதற் குரவனாகிய எம்பெருமான் விதிப்படி—உபதேசப்படி ஒழுகுபவர் அப்பிராகிருதர்—சிவாச்சிரயத்தர்—சிவப்பிரசாதம் பெற்றவர்—அமல முதற்படி மிதித்தவர். இவரே காயத்தை அமலமாக்கி—சூக்குமமாக்கி அதனோடு உலகு கண்டிட மறைந்து வீடடையும் ஆற்றலுடையவர்; வழியடியார்; மெய்யடியார். சித்தாந்தசிகாமணியை — ஆகமாந்தமாகிய இவ் அரியபெரிய நூலை மொழிபெயர்த்தவரும், தமிழ் வாணர்கருத்தை விட்டகலாத புலவர் சிங்கமுமாகிய துறைமங்கலம் சிவப்பிரகாசர் வித்துவப் பெரியாரேயாயினும் தற்கால வித்துவான்கள் போல உண்மை முத்தியை மறைக்கத் துணிந்தவரல்லர். சுத்தசாதகம் போல வெள்ளிடைமலையாகக் கூறுவிடினும், அந்நூல் கூறிய உண்மைமுத்திநிலையையே ஒப்புக்கொண்டு அதனையே உறுதிப் படுத்தினர் என்பது மிகையன்று. விரிப்பிற் பெருகும்.]

அமல முதற்படியை அடைந்து சாதலைத் தரும் "ஐ" நீங்கப்பெற்றவரே—மாற்றிப் பிறந்தவரே பூரணமான சகச நிட்டையுடையோராவர். பூரணமான சகச நிட்டையின் இலக்கணம் திருவாசகம், திருப்படையாட்சி என்னும் பதிகத்தால் நன்கு விளக்கப்பட்டது. அமயம் நேர்ந்துழி இவ்விஷயம் விரித்துவிளக்கப்படும்.

(தொடரும்)

அறங்கேட்டு மந்தணர் வாய்மொழி கேட்டு
மறங்கேட்டும் வானவர் மந்திரங் கேட்டும்
புறங்கேட்டும் பொன்னுரை மேனியெம் [மீசன்
திறங்கேட்டும் பெற்ற சிவகதி தானே.

தேவர்பி ரான்றனைத் திவ்விய மூர்த்தியை
யாவ ரொருவ ரறிவா ரறிந்தபின்
னேதமின்கேண்மி னுணர்மி னுணர்ந்தபி
னோதி யுணர்ந்தவ ரோங்கிநின் றாரே.

(அதி 1ம் தக். 21வது கேள்விகேட்டமைதல்.)
செ. 1,2)

இவர்கள் தங்கள் தங்கள் அறிவிற்கேற்ப அறமுதல் நாற் பொருளுக்கும் பொருள் கண்டு அமைவார்கள். அறவினை அறியாது—இல்லறம் அறியாது நாற் பொருட் பயனையும் இழந்து சாதலடைவார்கள். பொருள் என்பதனைத் தங்கள் தங்கள் மதிப்பொளிவிற்கேற்றவாறு பொருள் செய்து அவாவினை மேற்கொண்டு அலமந்து நிற்பார்கள்.

அறத்தான் வருவதே இன்பமற்றெல்லாம்
புறத்த புகழு மில.

என்னும் தேவர் வாக்கின் உண்மை உணராத உலகினர் பெற்றி இதுவே என்க.

இது காறும் கூறியவைகளால் அறமுதல் நாற்பொருட் பெற்றி ஒருசிறிது விளக்கப்பட்டது.

சுபம்.

ஆரியமும் தமிழும்.

"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" என்னும் அருள் வாக்கின் உண்மைப் பொருளை அறியும் ஆற்றலும் காதலும் இல்லாத சிலர், உலகச் சாதியானரை வேறு பிரித்துவிடக்கருதி அச் சாதியானரையே அப்பர் பாடினார் என்று அப்பெருமானை இகழ்ந்து கூறுவாராயினர். உண்மை முத்தியடைந்த தத்துவப் பெரியாரை மாண்டுபோன உலக மாக்கள் போல மதித்து வசை மொழி கூறித் தூற்றுவதும், சாதலடையக் கற்ற குட்டிக் கல்விச் சாமர்த்தியத்தால் அவர் திருவாக்குக்களை அநர்த்தஞ் செய்து இகழ்த்துணிவதும் அறியாமை மலிந்த சிறு குழவிகள் விளையாட்டேயன்றி வேறு என்னாகும்?

ஆரியனும் தமிழனும் ஆனவன் எம்பெருமான் என்று அவனையே போற்றியருளினார் அப்பர். உலகச் சாதிகளைத்தான் இரண்டு பாஷைகளைத்தான் உலகில் வழங்கும் நூல்களைத்தான் அவர் பாராட்டினாரல்லர். ஆரியம் தமிழ் என்பன யாவை? ஆரியர் யார்? தமிழர்யார்? இவ்வுண்மைகளை அறிதல் வேண்டும். ஆரியம் தமிழ் என்பன கடவுளால் சிலர்க்கு ஒருங்கே கூறப்பட்டு உலகில் வழங்கும் இரண்டு பாஷைகள் என்று பலரும் பரம்பரையாகக் கூறுகின்றனர். உலகில் வழங்கும் பாஷைகளுள் ஒன்றாகிய சம்ஸ்கிருதம் என்பது ஆரியப் பெயர் புனையப்பட்டு வழங்குகின்றது. ஆரியம் தமிழ் என்னும் இரண்டற்கும் உயர்வு தாழ்வு பேசிப் போராடினோரும் போராடுவோரும் பலர். இதனால் ஏற்பட்ட ஆராய்ச்சிகளும் முரண்பாடுகளும் அநர்த்தங்களும் பலவாகும். ஒரு சாரார் ஆரியம் சமஸ்கிருத பாஷையே என்றும் அதுவே தேவ பாஷையுமாம் என்றும் சில காரணங்காட்டி வாதிப்பர். மற்றொரு சாரார் சம்ஸ்கிருதம் இலத்தீன் முதலிய பாஷைகளுக்கே இனமாயதென்று இலக்கண ஒப்புமையும் பிறவும் கூறி அவரை மறுத்துத் தமிழே உயர் தனிச்செம்மொழியும் தெய்வ மொழியுமாம் என உரையாடுவர். சிலர் இவ்விரு சாராரையும் மறுத்து

ஆரியமுந் தமிழுமுடனே சொல்லிக்
காரிகையார்க்குங் கருணை செய்தானே.

என்பன முதலிய தத்துவப் பெரியார் பாடல்களைப் பிரமாணமாகக் காட்டி இவ் இரண்டு பாஷைகளும் கடவுள் அருளிய தெய்வீகமொழிகளே எனக்கூறி அமைவர். உண்மையை அநுபவமாக உணர்ந்த சமய குரவர் முதலிய தத்துவப் பெரியார் திருவாக்குக்களே யாவராலும் பிரபல சுருதிப் பிரமாணமாகக் கொள்ளப்படுகின்றனவாகும். ஆதலால் அத்தத்துவப் பெரியார் தமது பாடல்களில் கூறிய ஆரியம் தமிழ் என்பன யாவை? இவை இரண்டு பாஷைகளையே குறித்தனவா? கடவுள் இலக்கண வமைதியாலும் பிறவாற்றானும் வேறுபட்ட இருபாஷைகளை அஃதாவது "ஆரியம்" என்று ஒரு பாஷையையும் பின்பு தமிழ் என்று பிறிதோர் பாஷையையும் ஒரு சிலர்க்குக் கூறிவிட்டனரா? இஃது இயற்கை முறையாகுமா? கடவுள் பாஷைகளைக் கூறியது எவ்வாறு? ஆரியர் யார்? தமிழர் யார்? இத் திருநாமங்கள் உலகச் சாதி மாந்தரையே குறித்தனவா? இவற்றின் உண்மைதான் யாதோ? என்னில், அதுவே இச் சிறிய கட்டுரையில் ஒருவாறு ஆராய்வான் எடுத்துக் கொள்ளப்பட்ட பொருளாகும். உலகம் கால் தலையாய் தலை காலாய் மாறி உழலும் இக் காலத்தில் இத்தகைய ஆராய்ச்சி இன்றியமையாததாதலின், அறிஞர் இச் சிறிய கட்டுரையை ஆராய்ந்து ஒருபாற்கோடாது உண்மையை நாடி உய்த்துரைப்பார் என்னும் உறுதி பெரிதும் உடையேன்.

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினு [ம்அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

ஆரியம் தமிழ் என்னும் இரண்டும் ஆனவன் எம்பெருமான் என்பதும் இவ்வுண்மையை அநுபவமாக உணரும் மதிப்பொலிவுடைய வித்தகர்க்கே எம்பெருமான் குறியாக நிற்பன் என்பதும் பின்வரும் அப்பர் திருவாக்கால் நன்கு புலப்படும்.

அப்பர் தேவாரம்

ஆரியந்தமி ழோடிசை யானவன்
கூரி யகுணத் தார்குறி நின்றவன்
காரி கையுடை யான்கடம் பந்துறை
சீரி யல்பத்தர் சென்றடை மின்களே.
(ஷை திருக்கடம்பந்துறை — திருக்குறுந்தொகை. செ. 3.)

இன்னும், "ஆரியமும் செந்தமிழும் ஆனான் கண்டாய்" எனவும், "வடமொழியும் தென்றமிழும் மறைகளான்கும் ஆனவன் காண்" எனவும், "முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்" எனவும், "தமிழ்ச்சொலும் வடசொலும் தாணிழற்சேர" எனவும் பிறவுமாக வரும் சமயாசாரியர் திருவாக்குக்களாலும் இவை இரண்டும் எம்பெருமான் வடிவமே என்பது நன்கு புலப்படும்.

உலகில் வழங்கும் பாஷைகள் எல்லாம் புற இயக்கமாகிய ஒலிவரிவடிவமாய் வியாபகம் பெற்றவையாதலின், அவையெல்லாம் உள்ளியக்கமுடையதும் புற இயக்கமென்னும் ஒலி வரி வடிவம் இல்லாததுமாகிய வியாப்பியமென்னும் ஒரு காரணத்திலிருந்து வியாபகம் பெற்றுக் காரியப்பட்டனவாதலே இயற்கை முறையாகும். அத்தகைய வியாப்பியமாகிய காரணநிலையே கடவுளின் உண்மைவடிவமாதல் வேண்டும். காரணத்தின் விரிவாகிய காரியமும் ஒற்றுமை நயத்தால் கடவுள் வடிவமேயாகும். காரண காரியமாகிய வியாப்பிய வியாபக நிலைகளே ஆரியமும் தமிழும் என்று தத்துவப் பெரியாரால் புகழப்பட்டனவாகும். இவ்விரண்டும் எம்பெருமான் வடிவமே. இவை என்றும் உள்ளனவே. இவற்றிற்கு முற்பிற்பாடு கூறுதல் முடியாது. இவற்றின் அந்நியோந்நிய சம்பந்தம் அநாதியாக உள்ளது. ஆரியம் வியாப்பியம், தமிழ் வியாபகம். புற இயக்கமாகிய ஒலி வரி வடிவங்களெல்லாம் வியாபக முடையனவாதலின் அவை தமிழ் எனப்பட்டன. வியாபகமாகிய இத்தமிழே கால தேச வேறுபாட்டால் பல செயற்கைகளை அடைந்து பலவேறு பெயர்பெற்று உலகில் வழங்குகின்றது. ஈண்டு ஆரியம் தமிழ் என்னும் வியாப்பிய வியாபகங்கள் ஒரு சிறிது விளக்கிக் கூறப்படும்.

(தொடரும்)

"வித்தகம்" பெற்ற மதிப்புரை

-o-o-

இலங்கை

உக்குவளை

பிரசித்தி பெற்ற வியாபாரியும்,

சைவ சமரச சன்மார்க்க சங்கக் காரியதரிசியும் ஆகிய,

ஸ்ரீமாந். ஆ. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதியது.

"வித்தகம்"

அதிபர் அவர்கட்கு

புதுவை.

சைவ சமயாபிவிருத்தியின்பால் நோக்குடைப் பெரியாய்!

திருவாளர் ஞா. இராஜதுரை B. A., A. C. A. அவர்களால் தங்கள் "வித்தகம்" கிடைக்கப்பெற்றுப் படித்து உவகை எய்தினேன்.

புறச் சமயிகள் பரிகசித்தற்கேற்ற நிலைமையில் நம் சைவ சமயம் இருந்துவரும் இக்காலத்தில் சமயாபிமானத்தோடு கூடிய ஒரு பத்திரிகை குறைந்த (விகித) சந்தாவோடு வெளிவரின், நான்கு வேதம் இருக்கின்றன என்னும் பெருமை உளதாவதோடு, அவ் வேதத்தின் பெருமை எத்தகையது என அறியமுடியாத சிறுமையும் அகலுமே எனப் பலமுறை சிந்தித்த எனது ஆவலையும் என்போலும் பிறரது ஆவலையும் அருமை பெருமை வாய்ந்த கொள்கையுடன் வெளிவந்த "வித்தகம்" பூர்த்தி செய்தமைக்கு கைம்மாறு எனது மனமார்ந்த மகிழ்ச்சியைத் தெரிவிப்பதும் அவ் "வித்தக"த்தை ஆதரிப்பதுமே ஆகும். எல்லாம் வல்ல இறைவன் அருள் கொண்டு வெளி வந்த "வித்தகம்" இப்பூவுலகில் முக்கியமாகத் தமிழ் உலகத்தில் சைவசமயத்துக்கு அளப்பரிய நன்மை புரியும்படி அவ் "வித்தக"மும் அதன் அதிபரும் நீடு வாழும் வண்ணம் கிருபை பாலிக்கும்படி எல்லாம் வல்ல சித்தனை இறைஞ்சுகின்றேன்

சைவ சமரச சன்மார்க்க சங்கம்
உக்குவளை
31—1—34

இங்ஙனம்
அன்புள்ள
ஆ. கணபதிப்பிள்ளை
காரியதரிசி.

இலங்கை

திரிக்கோணமலை

தமிழ்ப் பண்டிதர்

வே. கிருஷ்ணபிள்ளை

அவர்கள் வழங்கிய

வாழ்த்துப்பா

அகவல்

வித்தகப் பால! வித்தகப் பால!!
இத்தரை யாண்டும் இசைநனி பரந்து
சத்திய மோங்கச் சைவநன் னெறிக்கோர்
புத்தியி ரளிக்கப் புதுவைநா டிருந்துயர்
பொறிதிகழ் விரியுடன் புறம்வரு நின்நலன்
அறிகுநருண்டுகொல்! அறிகுநருண்டுகொல்!
மூலமீ றில்லா முழுமுத லொருவனை
சாலநா மெளிதிற் றலையுற வுணர்தற்
கந்தமி லின்மறை அரிறப வோர்ந்துநஞ்
சிந்தையுட் புகுத்தச் சிலவிதழ் கொண்டே
வறிதில் பொருளொடு வருநின் றண்மாண்
அறிகுநருண்டுகொல்! அறிகுநருண்டுகொல்!!
முகிழ் கிலாத் திகழு மூவாத் திங்கள்
அகல்வான் றன்னி லாிரு ளன்ன
அஞ்ஞானக்கறை யடர்ந்த விஞ்ஞான்று
மெய்ஞ்ஞானச் சுடர் மிளிர்ந் திரு ளகலக்
காரிருள் சீத்துக் கதிரவன் முளைத்தல்போல்
பாரினுள் வந்தனை! பழுதில் வித்தகனே!!
வீறுயர் நின்றகை விளங்கிய விழுமியோர்
வேறுபத்திரங்கடாம் விரும்புவர்கொல்லோ?
அதனால்
மாயிரு ஞாலம் மகிழ்நனி யுறவே
நீயுநின் குருவும் நீடு வாழியவே.

"வித்தகம்"
வருட சந்தா விவரம்.
முன் பணம்
இந்தியா, பர்மா, சிலோன், ரூ. 3-0-0
மலாயா, சிங்கப்பூர், சைகோன் } ரூ. 4-0-0
வித்தக நிலையம்,
புதுச்சேரி.

RAMBLES IN VEDANTA
BY
B. P. Rama Iyer. Rs. 3-0-0
Rambles in Vedanta will in short be found as an infallible help to every one who wishes to gain his soul without losing the pleasure of life.
Nanchi Publishing House. [V.]
PONDICHERRY.

"வித்தகம்"
விளம்பர விகிதம்.
வியாபார விளம்பரம் அங்குலம் 1-க்கு ரூ. 0—8—0
கோர்ட்டு விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 1—0—0
☞ நீடித்த விளம்பரங்களுக்கு தனி விகிதம்.
வித்தக நிலையம்
புதுச்சேரி.

Sandhanam Printing Works, Pondicherry.
Le Gérant R. Nagarattinam.